# சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29–ஆம் தேதி நாள்:29.09.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சாதாரண கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | வடகிழக்கு பருவமழை 2022–முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை அவர்களின் அறிவுறைகளின் படி இந்நகராட்சியின் பொதுநிதித் திட்டம் 2022–23–ம் ஆண்டு நிதியின் கீழ் ரூ.4.32 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 12 வரையிலான வார்டுகளில் தாழ்வான பதுதிகளில் மழையினால் ஏற்படும் வெள்ள மழைநீரினை மழைநீர் வடிகால் வாய்க்கால் வழியாக துார்வாரி வெளியேற்றம் செய்திட JCB, HITACH,TRACTOR,TIPPER இயந்திரங்களையும் வாடகை அடிப்படையிலும் மற்றும் மனித சக்திகளை சப்ளை செய்யும் பணிக்கு, பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதனையும் மேலும் இப்பணி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் செலவீனம் **ரூ.3,21,758/–** நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 1325/2022/இ1/இ | தீர்மான எண்-997<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-2 | வடகிழக்கு பருவமழை 2022–முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை அவர்களின் அறிவுறைகளின் படி இந்நகராட்சியின் பொதுநிதித் திட்டம் 2022–23–ம் ஆண்டு நிதியின் கீழ் **ரூ 4.32 இலட்சம்** மதிப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13 முதல் 24 வரையிலான வார்டுகளில் தாழ்வான பதுதிகளில் மழையினால் ஏற்படும் வெள்ள மழைநீரினை மழைநீர் வடிகால் வாய்க்கால் வழியாக துார்வாரி வெளியேற்றம் செய்திட JCB, HITACH,TRACTOR, இயந்திரங்கள் குடிநீர் சப்ளை செய்யும் குடிநீர் லாரி வாடகை அடிப்படையில் பாதுகாப்பு மையங்களுக்கு குடிநீர் சப்ளை செய்திட மற்றும் மனித சக்திகளை வழங்கும் பணிக்கு, பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதனையும் மேலும் இப்பணி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் செலவீனம் **ரூ.3,84,241/–** நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 1325/2022/இ1/ஈ | தீர்மான எண்-998<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-3 | வடகிழக்கு பருவமழை 2022–முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை அவர்களின் அறிவுறைகளின் படி இந்நகராட்சியின் பொதுநிதித் திட்டம் 2022–23–ம் ஆண்டு நிதியின் கீழ் **ரூ.3.43 இலட்சம்** மதிப்பீட்டில் 9 தற்காலிக பாதுகாப்பு மையங்களில் ஜென்செட்டுகள் டியூப்லைட்டுகள் போகஸ் லைட்டுகள் மற்றும் வெள்ளம் பாதிக்கப்படும் இடங்களில் மழைநீர் புகாமல் மணல் மூட்டைகள் அமைத்தல் மழைநீரை அப்புறபடுத்திட ஆயில் இன்ஜீன்கள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணிக்கு, பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதனையும் மேலும் இப்பணி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் செலவீனம் **ரூ.2,72,464/–** நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 1325/2022/இ1/அ | தீர்மான எண்-999<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சியில் நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2022–2023ன் கீழ் அமைக்கப்பட்ட சாலைகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் நேரடி ஆய்வின் போது தேர் வடக்கு வீதி, தேர் மேல வீதி மற்றும் தேர் தெற்கு வீதி ஆகிய வீதிகளில் அமைக்கப்பட்ட சாலைகளில் வெள்ளை நிற கோடு (THERMO PLASTERING) அமைத்திட அறிவுறுத்தியதின்படியும், மேலும் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படியும், தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.6.00 இலட்சத்திற்கு** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:785/2023 / இ1/1** | தீர்மான எண்-1000<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-5 | சீர்காழி நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூடத்தில் பாதுகாப்பு வசதிக்காக CCTV கேமராக்கள் பொருத்திட ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறையின் படி **ரூ.1.00 இலட்சம்** மதிப்பீட்டில் 4 எண்ணிக்கை CCTV கேமராக்கள் மற்றும் 1 எண்ணிக்கை NVR பொருத்தும் பணிக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:884/2023 / இ1 | தீர்மான எண்-1001<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-6 | நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல்(SS&FC) துறை அரசாணை நிலை எண் (4D) 35 நாள்.18.08.2023 அரசாணையின் படி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–24 ன் கீழ் சீர்காழி நகராட்சியில் புதிதாக தினசரி மீன் மார்கெட் கட்டிடம் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து, Field & Laboratory & Structural Design செய்து சான்று தர ஆய்வு செய்து வழங்கிடவும் அண்ணா பல்கலைக்கழகம், பல்கலைக் கழக பொறியியல் கல்லூரி, பட்டுக்கோட்டைக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவீனம் **ரூ.1,00,000/–**ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 798/2023/இ1 | தீர்மான எண்-1002<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-7 | இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2023–ஐ எதிர்கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் தாழ்வான பதுதிகளில் மழையினால் ஏற்படும் வெள்ள நீரினால் பொது மக்கள் பாதிக்காத வகையில் உடன் வடிய அப்பகுதிகளில் உள்ள வாய்கால்களை தூர்வாரி வெள்ள நீரினை தேங்காத வண்ணம் JCB இயந்திரம், மூலம் வாய்கால்களில் உள்ள செடி, கொடிகளை அகற்றி அடைப்புகளை வெட்டி அப்புறப்படுத்திட ஆகும் உத்தேச செலவீனம் **ரூ.10.00 இலட்சத்திற்கு** நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 1803/2023/இ1 | தீர்மான எண்-1003<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-8 | சீர்காழி நகராட்சியில் உள்ள 24 வார்டுகயில் அமைக்கப்பட்டுள்ள 30 எண்ணிக்கை கை பம்புகளுக்கு அடித்தளம் அமைக்காததால் கை பம்பு ஆடி சேதமடையும் நிலை உள்ளது. எனவே நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கையின் படி, நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின் படி 30 எண்ணிக்கை கை பம்புகளுக்கு அடித்தளம் அமைக்க ஆகும் செலவீனம் **ரூ.1.50 இலட்சத்திற்கு** நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1803/2023/இ1/1 | தீர்மான எண்-1004<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-9 | சீர்காழி நகராட்சி பொதுசுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) 2018-2019 முதல் 2022-2023ஆம் ஆண்டு வரை உள்ள தணிக்கை பகுப்பாய்வு நிலுவை கட்டணம் **ரூ.4,310/-**க்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், நாகப்பட்டினம் அவர்களுக்கு வங்கி வரைவோலையாக செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u>: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 1950/2023/எச்1 | தீர்மான எண்-1005<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-10 | சீர்காழி நகராட்சி பொதுசுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) விழிப்புணர்வு நடவடிக்கைகள் இந்திய பசுமை திட்ட இயக்குநர் மற்றும் ஆலோசகர் திரு.ஜி.சீனிவாசன் என்பவரால் மயிலாடுதுறை மாவட்டத்தில் நடத்தப்பட்டது. மேற்படி இது குறித்து மாவட்ட நிறுவனத்திற்கு வள கட்டணம் **ரூ.10,000/-** செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u>: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 1822/2023/எச்1 | தீர்மான எண்-1006<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-11 | சீர்காழி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016விதி 3(8)ன் கீழ் சீர்காழி நகராட்சி பகுதியில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 100கிலோவிற்கு அதிகமாக கழிவுகளை உருவாக்கும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு மறுசுழற்சி செய்வதற்கு ஏற்ப உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து நாள்:09-06-2023 அன்று மக்கள் குரல் செய்திதாளில் அறிவிப்பு விளம்பரம் செய்ததற்கான பட்டியல் தொகை **ரூ.16,800/-**ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u>: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 1592/2023/எச்1. | தீர்மான எண்-1007<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-12 | சீர்காழி நகராட்சி வார்டு எண்–04 புளிச்சக்காடு மெயின்ரோட்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பிச்சைகார விடுதி 31 ஏர்ஸ் பரப்பளவில் அமைந்துள்ளது இதில் இடிந்த நிலையில் 50 வருடங்களான பழைய கட்டிடங்கள் மற்றும் காலியிடமாகவும் உள்ளது. மேற்படி இடம் பராமரிப்பின்றி உள்ளதால் அப்பகுதி மக்களால் ஆக்கிரமைப்பு செய்யும் சூழ்நிலையில் உள்ளது. எனவே அதனை தடுத்திடவும் மேற்படி இடத்தினை மீட்டெடுக்கும் வகையிலும் நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின் படி பிச்சைகார விடுதியினை சுற்றி மதில் சுவர் அமைத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.20.00 இலட்சத்தை** நகராட்சி வளர்ச்சி திட்ட பணி நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2117/2023/எப்1 | தீர்மான எண்-1008<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>பொருள் எண்-13</td>
<td>சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:10-ல் அமைந்துள்ள வி.என்.எஸ் நகர் பூங்கா கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் (2022–2023) கீழ் ரூ.33.80 இலட்சம் மதிப்பீட்டில் பூங்காவினை மேம்பாடு செய்யும் பணியினை நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி,பூங்காவில் கூடுதலாக பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பூங்காவின் உட்புறத்தில் சுற்றி பேவர் பிளாக் நடைபாதை தளம் அமைத்திட அறிவுறுத்தியதின்படி, தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.கண்:1556/2022/இ1/1</td>
<td>தீர்மான எண்-1009<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-14</td>
<td>சீர்காழி நகராட்சியில் பொது நிதி 2023-2024 இன் கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் சீர்காழி நகராட்சியில் நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2022–2023ன் கீழ் அமைக்கப்பட்ட சாலைகளில் வெள்ளை நிற கோடு (THERMO PLASTERING) அமைக்கும் பணிக்கு 01.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டை விட</th></tr>
<tr><td>1</td><td>திரு.செந்தமிழ்செல்வன்,<br>ஒப்பந்ததாரர்,<br>எட–கீழையூர்,திருச்சி</td><td>(-) 0.07% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.தமிழ்செல்வன்,<br>ஒப்பந்ததாரர்<br>எட–கீழையூர்,திருச்சி</td><td>(+)21.68% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்–1 ல் திரு.செந்தமிழ்செல்வன் ஒப்பந்ததாரர், எட–கீழையூர், திருச்சி அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br><u>அலுவலகக் குறிப்பு</u> : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க. எண்:785/2023/இ1</td>
<td>தீர்மான எண்-1010<br>நாள்.29.09.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

நாள்: 26-09-2023 நகர்மன்ற தலைவர்

இடம்: சீர்காழி சீர்காழி நகராட்சி